# சொற்றொடர்

## பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

1. சொற்றொடர் என்றால் என்ன?
2. வாக்கியம் என்றால் என்ன?
3. வாக்கிய உறுப்புக்கள் எவை?
4. வாக்கியத்துணை உறுப்புக்கள் எவை?
5. தனி வாக்கியம் என்றால் என்ன? உதாரணம் தருக.
6. கூட்டு வாக்கியம் என்றால் என்ன? உதாரணம் தருக.
7. தொடர் வாக்கியம் என்றால் என்ன? உதாரணம் தருக.
8. கலப்பு வாக்கியம் என்றால் என்ன? உதாரணம் தருக.

- **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. நீ அந்த வேலையை செய். இவ்வாக்கியம்

1.கூற்று வாக்கியம்　　2. வினாவாக்கியம்

3.ஏவல் வாக்கியம்　　4.வியங்கோள் வாக்கியம்

2. நீ நீடுழி வாழ்க! என்பது

1. கூற்று வாக்கியம்　　2. கூட்டு வாக்கியம்

3. உணர்ச்சி வாக்கியம்　　4. வியங்கோள் வாக்கியம்

3. நன்றாக படித்தான். இதில் தோன்றா எழுவாய்

1. நீ　2. நான்　3. அவன்　4. நாம்

4. மெதுவாக பேசினான். இங்கு மெதுவாக என்பது

1. எழுவாய் அடைமொழி

2. செயப்படுபொருள் அடைமொழி

3. பயனிலை அடைமொழி

4. பெயரடை

5. தம்பி புத்தகத்தை எடுத்து பாடத்தை வாசித்தான். இவ்வாக்கியம்

1. கூட்டு வாக்கியம் 2. தொடர் வாக்கியம்
3. கலப்பு வாக்கியம் 4. தனி வாக்கியம்

- **கலப்பு வாக்கியங்கள் ஐந்தினை தந்து அவற்றில் உள்ள தலைமை தொடர் , சார்புத்தொடர்களினைத் தருக.**

- **இவ்விரு தனி வாக்கியங்களை கூட்டு வாக்கியமாக்குக.**

**1. குயில் கறுப்பு நிறப் பறவை**
**2. குயில் இனிமையாக பாடும்பறவை**

**1. பாரதியின் பாடல்கள் எளிமை நிறைந்தவை**
**2. பாரதியின் பாடல்கள் இனிமை நிறைந்தவை**